DEPOSITION OF WITNESS
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
Date : 26.09.2025.
MCOP.No. 116/2008

ம.சா. 1 திரு. வீரைய்யா.

<u>2-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

விபத்து நேரத்தில் TN 22 T 0774 என்ற மாருதி ஆம்னி வாகனத்தில் திருப்பரங்குன்றத்தில் இருந்து கோவை நோக்கி நான் பயணித்துக் கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். என்னுடன் சாகாயராஜ், ராஜேந்திரன், சந்தன பிரகாஷ் ஆகியோர் பயணம் செய்து கொண்டு இருந்தனர் என்றால் சரிதான். ரகு என்பவர் வாகனத்தை ஓட்டிக் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். தாராபுரம் அருகே சென்று கொண்டு இருந்த பொழுது Indian Hotel என்ற இடத்தில், அந்த ஓட்டலில் இருந்து வெளியே திடீரென ஒரு பேருந்து வந்தது என்றால் சரிதான். அந்த பேருந்திற்கு பின்புறம் அதே ரோட்டில் வந்த லாரி சாலையின் வலதுபுறம் ஏறி வந்தது என்றாலும், அதில் மோதாமல் இருப்பதற்காக மாருதி ஆம்னி வண்டியை ரோட்டின் இடதுபுறம் திருப்பினார் என்றால் சரிதான். அப்பொழுதான் இடதுபுறம் இருந்த புளிய மரத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநர் திடீரென்று சாலையில் இடதுபுறம் திரும்பியதால், அவருடைய கவனக் குறைவினால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஓட்டுநர் ரகு கவனத்துடன்தான் வண்டியை ஓட்டினார் என்றால் சரிதான். இந்த விபத்து நடந்தது 19.03.2008 என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தது 21.03.2008 என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தப்பட்ட காயச்சான்றிதழை நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

விபத்து நடந்தவுடன் தாராபுரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றேன் என்றாலும், அதற்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். அங்கு முதலுதவி செய்துவிட்டு, மேல் சிகிச்சைக்காக உடனே மதுரை, இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மதுரை, இராஜாஜி மருத்துவமனையில் 19.03.2008 முதல் 17.04.2008 வரை நான் சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு இன்றுவரை நான் வேறு எடுத்துக் கொள்ள வில்லை என்றால் சரியல்ல. அடிக்கடி இடது கால் வலி மற்றும் தொந்தரவிற்காகவும், இடது கண் மற்றும் கன்ன பகுதியில் ஏற்படும் தொந்தரவிற்காகவும் அரவிந்த் கண் மருத்துவமனையிலும், அருகே உள்ள மற்றொரு மருத்துவமனையிலும் அடிக்கடி சிகிச்சை பெறுகிறேன். அரவிந்த் கண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாத வருமானம் ரூ.5000/- என்பதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வயது மற்றும் வேலை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் ரகுவிற்கு ஆம்னி வாகனத்தை ஓட்டுவற்குரிய உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆம்னிக்கு பதிவுச்சான்றிதழும் உரிய முறையில் இல்லை என்றால் சரியல்ல. இந்த மனு அடிக்கடி எனது தவறுகைக்காக தள்ளுபடியான சமயத்திற்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அதிப்படியான இழப்பீட்டை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 26.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V.Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.